# செங்கல்பட்டு நகராட்சி

## 2018–19 –ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

**பரப்பும் அமைப்பும்**

செங்கல்பட்டு நகராட்சியின் எல்லை நத்தம், குண்டூர், செங்கல்பட்டு, மேலமையூர் பகுதி, வேண்பாக்கம் பகுதி, அனுமந்தபுத்தேரி ஆகிய ஆறு வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாகும்.

இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 6.09 சதுர கிலோ மீட்டராகும். இந்நகரம் 1886–ஆம் ஆண்டு நகராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அரசாணை எண்.169 உள்ளாட்சி துறை, நாள்.01.02.1972–ன் படி இந்நகராட்சி 01.4.1972 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும், அரசாணை எண்.599 உள்ளாட்சி துறை நாள்.17.4.1984–ன் படி முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரத்தின் மொத்த மக்கள் தொகை 64,136 ஆகும்.

இந்நகரம் தேர்தல் காரியங்களுக்காகவும், நிர்வாக காரியத்திற்காகவும் ஏற்கனவே, 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு இருந்தது 1996–ஆம் ஆண்டில் நடைபெற்ற நகராட்சி தேர்தலுக்காக 1991–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரத்தை மொத்தம் 33 நகர மன்ற உறுப்பினர் வார்டுகளாக பிரிக்கப்பட்டு அரசு உள்ளாட்சித் துறை 11.6.96–ம் தேதிய ஆணை எண்.135–ன் படி அங்கிகரிக்கப்பட்டது தற்போது அரசு ஆணைப் படி வார்டுகளின் எண்ணிக்கை 33 ஆகும்

**1. நகர மன்றம்**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் சட்டபூர்வ ஆணை எண்.27 ந.நா.மா.தே.ஆ/2011தே.பொ.2011 நாள் 11.9.2011ன்படி நகராட்சிக்கு மொத்த நகர மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 33 என நிர்ணயம் செய்யப்பட்டது. இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) 3 உறுப்பினர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) 2 பழங்குடியினர் –1 உறுப்பினர்களுக்கும், மகளிர் (பொது) 8 உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. மீதி 19 பொது உறுப்பினர்களாகவும் ஒதுக்கப்பட்டது.

இந்நகரமன்றத்திற்கான தேர்தல் கடந்த 21.10.2011–அன்று நடைபெற்றது அதன்படி 25.10.2011–ம் தேதி முதல் இந்நகர மன்றம் செயல்படுகிறது.

**2.(அ) ஆணையர்**

திரு த. சௌந்தரராஜன், ஆணையர், 1.4.2017 முதல் 27.8.2017 வரையிலும் திருமதி பி. மாரிசெல்வி, ஆணையர் 28.8.2017 முதல் 09.03.2019 வரையிலும் ஆணையராக பணிபுரிந்துள்ளார்கள்.

**2(ஆ) மேலாளர்**

திரு. எம்.கே. முனுசாமி, அவர்கள் 1.4.2018 முதல் 31.03.2019 வரையிலும் மேலாளராக பணிபுரிந்துள்ளார்.

**2.(இ) கணக்கர்**

திரு. இ. நடராஜன், கணக்கர் அவர்கள் 1.4.2018 முதல் 31.03.2019 வரையிலும் கணக்கராக பணிபுரிந்துள்ளார்கள்.

**3.தேர்தல்**

அறிக்கையாண்டில் திருமதி பி. மாரிசெல்வி, 01.04.2018 முதல் 18.02.2019 வரையிலும், திரு.G.ரவிச்சந்திரன் நகராட்சி பொறியாளர் 18.02.2019 முதல் 09.03.2019 வரையிலும், திரு.ந.தட்சணாமூர்த்தி ஆணையர் 09.03.2019 முதல் 31.03.2019 வரையிலும், ஆணையர் மற்றும் தனி அலுவலர்களாக இருந்து வருகிறார்கள்.

**4.நகர் மன்றக் கூட்டங்கள்**

அறிக்கையாண்டில் 11 சாதாரணக் கூட்டங்களும் 9 அவசரக் கூட்டங்களும் 0 சிறப்பு கூட்டங்கள் ஆக மொத்தம் 20 கூட்டங்கள் நடைபெற்றன. இந்த நகர மன்றக் கூட்டங்களில் மொத்தம் 401 பொருள்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

**5.பரிபாலனம்**

15.4.1935–ம் தேதி அரசு ஆணை எண்.1433–ன்படி கழிப்பிட வரி, கல்வி வரி, தண்ணீர் மற்றும் சாக்கடைக்கால் வரிகள் நீங்கலாக, பொதுப் பிரிவு அலுவலக சிப்பந்திகள் மற்றும் வசூல் சிப்பந்திகள் ஆகியோர்களின் சம்பளம் முதலியன நிர்வாக செலவுகள் ரூ.6,60,86,522/– ஆகும்

**6.சிப்பந்திகள்**

அறிக்கையாண்டில் திரு. ஜி. ரவிச்சந்திரன் அவர்கள் 01.04.2018 முதல் 31.3.2019 வரையில் நகராட்சி பொறியாளராக பணியாற்றி உள்ளனர்.

பொறியியல் பிரிவு சிப்பந்திகளுக்காக இவ்வாண்டில் ரூ.55,40,700/– செலவிடப்பட்டது. பொதுப்பணி உதவி பொறியாளர் ஒருவரும் இப்பிரிவில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவர்களுடன் மின் கண்காணிப்பாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகிறார்.

**7.சாலைகள், பாலங்கள், தோனித்துறைகள் மற்றும் கட்டிடங்கள்**

இந்நகராட்சியால் கீழ்கண்ட விவரப்படி 43.964 கீ.மீ. நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| அ)சிமெண்ட் தள சாலைகள் | – | 24.588 கி.மீ |
| ஆ)தார் தளம் சாலைகள் | – | 19.376 கி.மி |

இவைகள் நீங்களலாக நகராட்சி எல்லைக்குள் 5.610 கி.மீ. நீளமுள்ள கீழ்கண்ட சாலைகள் மாநில நெடுஞ் சாலைத் துறையினரால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

1.ஜி.எஸ்.டி.சாலை

2.காஞ்சிபுரம் ஐரோடு

**மின் விளக்குகள்**

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விவரப்படி 3969 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டன

| | | |
|---|---|---|
| அ.சோடியம் ஆவி விளக்குகள் | – | 426 எண்கள் |
| ஆ.குழல் விளக்குகள் | – | 2266 எண்கள் |
| உயர்கோபுர மின் விளக்குகள் | – | 18 எண்கள் |
| சி.எப்.எல் | – | 349 எண்கள் |
| எல்.இ.டி. | – | 190 எண்கள் |
| மொத்தம் | – | 3249 எண்கள் |

தெரு விளக்குகள் பராமரிப்பு கடந்த 15.9.1989–ஆம் தேதி முதல் நகராட்சியால் அரசு ஆணை நிலை 344 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்

9.6.1989–ன்படி பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பணியில் இரண்டு மின் கம்பியாளர் மற்றும் இரண்டு பணி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு பராமரிப்பு பணி செய்யப்படுகிறது. தற்போது நகராட்சி பணியாளர்கள் மூலம் வார்டு எண்.1 முதல் 6 வரையிலும், ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் தனியார் மூலம் வார்டு எண். 7 முதல் 33 வரையிலும் 2717 தெரு விளக்குகளையும் பராமரிக்கப்படுகின்றன.

தெரு விளக்கு கணக்கு தலைப்பில் இவ்வாண்டு ரூ.30,00,000/– செலவிடப்பட்டு உள்ளது. .

<u>கல்வி</u>

1.4.1990 முதல் கல்வி சார்ந்த அனைத்து பள்ளிகளும் அரசினரால் நடத்தப்படுகிறது.

<u>சிறார்கட்கும், பள்ளி செல்லும் பிள்ளைகட்கும் அரசு சத்துணவுத் திட்டம்</u>

செங்கல்பட்டு நகராட்சிக்குள் உள்ள 5+9 புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மையங்கள் செயல்பட்டு வருகிறது. பள்ளியில் பயிலும் 5+9 மற்றும் 10 முதல் 14 வரை வயது முடியவுள்ள பிள்ளைகட்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு அளிக்கப்பட்டு வருகின்றது. இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 4 பள்ளிகளில் 4 மையங்கள் இயங்கி வருகிறது. பள்ளிகளில் இயங்கும் 4 மையப் பணிகளை கவனிக்க நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்கள் ஒரு உதவியாளர்–இணைந்த–கணக்கர் பதவி தோற்றுவித்துக் கொள்ள உத்திரவிடப்பட்டது. அதன்படி ஒரு உதவியாளர் இணைந்த கணக்கர் பணிபுரிந்து வருகிறார்.

<u>இடவசதியும் உபகரணங்களும்</u>

இந்நகராட்சியில் 4 பள்ளிகள் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே இயங்கி வருகிறது. 4 பள்ளி சத்துணவு மையங்களில் 2 அமைப்பாளர்களும் 3 சமையலர்கள் 4 உதவியாளர்கள் பணிபுரிகின்றனார். இத்திட்டத்தின் கீழ் 155 பிள்ளைகளும் சத்துணவு வழங்கப்படுகிறது.

<u>ஆரம்பக் கல்வி</u>

இவ்வாண்டின் ஆரம்பக் கையிருப்பு ரூ.28,16,684/– சாதாரண தலைப்பின் கீழ் இவ்வாண்டில் ரூ.18,02,202/– செலவு செய்யப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி ஆரம்பக் கல்வி நிதி கணக்கில் வருமானம்.

| | | |
|---|---|---|
| 1.கல்வி வரி மூலம் கிடைத்தது | – | ரூ.57,64,563/– |
| 2.ஆரம்பக் கல்வி கணக்கில் பற்றாக்குறை | – | இல்லை |

மான்யம் இதர இனங்களில் மூலம் கிடைத்த அரசு

மான்யம் (திட்டப் பிரிவு)

3.ஆரம்பக் கல்வி சட்டத்தின் 37வது பிரிவின் – இல்லை
விதிப்படி கிடைத்த அரசு மான்யம்

**<u>உயர்தரக் கல்வி</u>**

1.4.90 முதல் உயர்நிலைப் பள்ளி அரசினரால் நடத்தப்படுகிறது.

**<u>பிரத்யோக பள்ளிக்கூடங்கள் மற்றும் பொது மக்கள் நூல் நிலையங்கள்</u>**

இந்நகராட்சி பிரத்யோகப் பள்ளி ஏதும் நடத்தவில்லை இருப்பினும் நெடுங்காலமாக அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி ஒன்று உள்ளது. இந்த அரசினர் சீர்திருத்தப் பள்ளியில் இளம் குற்றவாளி சிறுவர்களுக்கு கல்வியும் சிறு கைத்தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது இந்த ஆண்டில் 15 மாணவர்கள் உள்ளனர். கடந்த ஆண்டு 15 மாணவர்களிருந்தார்கள்.

**<u>பொது மக்கள் நூல் நிலையம்</u>**

இந்நகரில் செங்கல்பட்டு மாவட்ட நூலக ஆணைக்குழுவினால் பராமரிக்கப்பட்டு வரும் மத்திய நூலகம் ஒன்று உள்ளது.

**<u>மருத்துவமனைகள்</u>**

இந்நகரில் கீழ்காணும் மருத்துவ நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1.செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

2.ஜே,எஸ்.பி. ஆஸ்பத்திரி

3. ரங்கா கிளினிக்

4. பாலாஜி மருத்துவமனை

5.ஜெ.ஜெ. மருத்துவமனை

மேற்காண்பவைகளை தவிர நன்கு பயிற்சி பெற்ற தனிப்பட்ட மருத்துவர்களால் சொந்தத்தில் நடத்தப்படும் சுமார் 40 தனி மருத்துவமனைகள் (பிரைவேட் கிளினிக் ) உள்ளன.

நகரிலுள்ள நோயாளிகள் பெரும்பாலானோர் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பொது மற்றும் சிறப்பு பிரிவுகளில் நோய்களுக்கு ஏற்றவாறு உரிய சிகிச்சைகளை தொடர்ந்து பெற்று வருகிறார்கள்.

**<u>குடி தண்ணீர் விநியோகம்</u>**

**<u>1.பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்</u>**

செங்கல்பட்டு நகர் குடிநீர் வழங்கல் பணிக்காக பாலாற்று படுகையில் திம்மாவரம், பழவேலி, மாமண்டூர் ஆகிய இடங்களில் மூன்று நீரேற்று நிலையங்கள் இருந்தன. பருவமழை குறைவு வறட்சி காரணமாக பல ஆண்டுகளாக பாலாற்றில் நீர்வரத்து முற்றிலும் இல்லாமைமால் ஒழலூர் நீரேற்றும் நிலையம் நீர் ஆதாரம் இல்லாமையால் முற்றிலும் நிரந்தரமாக நிறுத்தம் செய்யப்பட்டு தற்போது மாமண்டூர் பாலம் அருகே உள்ள இடத்தில் புதியதாக தலைமை பணியிடம் அமைக்கப்பட்டு நீர் ஆதாரம் கூடுதலாக்கப்பட்டுள்ளன. ரேடியோமலை, அளகேசன் நகர், சார் ஆட்சியர் அலுவலகம், தட்டான்மலை, பாசித் தெரு, பெரியமணியக்கார தெரு, குடிநீர் தரை மட்ட மற்றும் மேல்நிலை தொட்டிகளுக்கும் சாராசரியாக நாள் ஒன்றிற்கு 45 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றப்பட்டு நபர் ஒருவருக்கு சராசரியாக 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாள் ஒன்றிற்கு விநியோகிக்கப்படுகிறது.

**<u>குடிநீர் தேக்கத் தொட்டிகள் விவரம்</u>**

| | | |
|---|---|---|
| ரேடியோ மலை தரைமட்ட குடிநீர் தொட்டி–1 | – | 9,00,000 லிட்டர் |
| ரேடியோ மலை தரைமட்ட குடிநீர் தொட்டி–2 | – | 3,60,000 லிட்டர் |
| ரேடியோ மலை தரைமட்ட குடிநீர் தொட்டி–3 | – | 5.40,000 லிட்டர் |
| சார் ஆட்சியர் அலுவலக வளாகம் | – | 2,00,000 லிட்டர் |
| பாசித்தெரு மேல்நிலை தொட்டி | – | 4,00,000 லிட்டர் |
| பெரியமணியக்கார தெரு மேல்நிலைதொட்டி | – | 4,00,000 லிட்டர் |
| சார் ஆட்சியர் வளாக மேல்நிலை தொட்டி | – | 3,00,000 லிட்டர் |
| தட்டான்மலை | – | 30,000 லிட்டர் |
| அழகேசன் நகர் மேல்நிலைதொட்டி | – | 1,50,000 லிட்டர் |
| | | 32,50,000 லிட்டர் |

**<u>குடிநீர் இணைப்புகள் மற்றும் பொது குழாய்களின் விவரம்.2017–2018</u>**

அறிக்கை ஆண்டு வரை குடிநீர் இணைப்புகள் 7394 வழங்கப்பட்டுள்ளது. இதில் வீட்டு இணைப்புகள் 7378, தொழிற் கூடங்களுகான இணைப்பு ஒன்று மற்றும் அரசு கட்டிடங்களுக்கான இணைப்பு 41 ஆக மொத்தம் 7413 குடிநீர் இணைப்புகள் உள்ளது. இதன் மூலம் இவ்வாண்டில் நடப்பு மற்றும் நிலுவை சேர்த்து தொகை ரூ.46,15,000/– வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொதுக் குழாய்களின் எண்ணிக்கைகள் 187 எண்கள் உள்ளது.

**குடிநீர் கட்டணம்**

இணைப்புகளுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ.60/—ம் அதற்கு மேல் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு 1000 லிட்டர்கள் அதன் பாகத்திற்கு ரூ.10/— வசூலிக்கப்படுகின்றன. தற்போதிய இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் கூடுதலடைந்து வரும் நிலையில் குடிநீர் இணைப்பு கட்டணங்கள் உயர்வு மேற்கொள்ள நடடிக்கை பிரேரனையில் உள்ளது.

வீட்டு உபயோக குழாய்களுக்கு மாதம் ரூ.60/— வசூலிக்கப்படுகிறது வீட்டு உபயோகம் அல்லாத காரியங்களுக்கு வியாபார காரியங்களுக்கும் பயன்படும் இணைப்புகளுக்கு ஒவ்வொரு 1000 லிட்டர் அதன் பகுதிக்கு ரூ.20/— வீதம் வசூல் செய்யப்படும். குறைந்த பட்ச கட்டணம் ரூ.200/— வசூல் செய்யப்படும். தொழிற்கூடங்களுக்கு பயன்படும் இணைப்புகளுக்கு எவ்வித இலவசம் வழங்கலும் இல்லை. ஒவ்வொரு 1000 லிட்டர் அதன் பகுதிக்கு ரூ.20/— வீதம் வசூல் செய்யப்படும். குறைந்த பட்ச கட்டணம் ரூ.200/— வசூல் செய்யப்படும் .

**குடிநீர் லாரி**

இந்நகராட்சியில் குடிநீர் லாரி 8000 லிட்டர் கொள்ளவு கொண்ட சுமையுந்து ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நகரத்தில் குடிநீர் தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

**பொதுக் கிணறுகள் மற்றும் ஆழ்துளை கை பம்புகள்**

நகராட்சியால் 14 பொது கிணறுகள், 65 சிறு மின் விசை பம்ப், மற்றும் 50 ஆழ்துளை கை பம்புகள் செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகிறது.

**சாக்கடை வடிகால்கள்**

நகரில் தெருக்களில் சாக்கடைகள் திறந்த வடிகால் மூலமாக அப்புறப்படுத்தப்படுகிறது.

**அங்காடிகள், பேருந்து நிலையம் மற்றும் ஆடு அறுவை சாலை ஆகியவைகள் கடந்த மூன்று ஆண்டுகளில் வரப்பெற்ற வருமானம்**

| | | 2015—2016 லட்சம் | 2016—2017 லட்சம் | 2017—2018 லட்சம் | 2018—2019 லட்சம் |
|---|---|---|---|---|---|
| 1. | காய்கறி அங்காடி | 20.03 | 21.03 | 22.08 | 9.72 |
| 2. | மீன் அங்காடி | 1.80 | 1.89 | 1.98 | 3.00 |
| 3. | ஆடு அறுவை சாலை | 0.72 | 0.75 | 0.79 | 1.20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | பேருந்து நிலையம் | 9.05 | 9.44 | 8.60 | 7.80 |
| 5. | மாமிச நாளங்காடி | 0.07 | 0.07 | 0.07 | – |

மேற்காணும் வருவாய் வரத்தக்க இனங்கள் யாவும் வழக்கம்போல் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படுகிறது. அலுவலக மூலமாக இனம் ,4 மற்றும் 5 ஆகியவை வசூலிக்கப்படுகிறது. இந்நகராட்சியால் வார சந்தை ஏதும் நடத்தப்படவில்லை. இந்நகராட்சிக்கு சொந்தமான அங்காடியிலும் தினசரி வசூலிக்கப்படும் கட்டணமானது 12 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டதாகும். தற்போதுள்ள விலைவாசிகளின்படி இக்கட்டணத்தை உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் இதனால் அங்காடிகள் மூலம் வருவாய் சற்று அதிகமாகும்.

தினசரி அங்காடி ரூ.14.97 லட்சம் மதிப்பீட்டில் மத்திய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு 1.9.1984 முதல் இயங்கி வருகிறது.

<u>பேருந்து நிலையம்</u>

பிள்ளையார் குளத்தில் பேருந்து நிலையம் அமைத்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண்.38978/72/பி5 நாள் 11.4.1973–ல் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி அனுமதியின் படி பிள்ளையார் குளம் திடலில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 19.4.1973–ல் திறக்கப்பட்டு அன்று முதற்கொண்டு இப்பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் குளம் திடல் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானதாகும். இதன் மொத்த பரப்பளவு 1.88 ஏக்கர் இந்த இடத்தை நகராட்சி 23.9.1979–ம் தேதியில் ரூ.37,700/–க்கு சொந்தமாக வாங்கி பராமரிக்கப்ட்டு வருகிறது.

இந்த பேருந்து நிலையத்தை உபயோகிக்கும் பேருந்து ஒன்றுக்கு தினம் ஒன்றுக்கு இரண்டாம் நிலை பேரூந்து கட்டணம் ரூ.12/– வீதம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 4.3.2002 நாளிட்ட அரசு ஆணை எண். எம்.ஏ,டபள்யு.எஸ்.175 உத்திரவு படியும் மேற்படி பேருந்து நிலைய கட்டணத்தை ரூ.3.00 லிருந்து ரூ.12.00 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. இதன்படி இந்நகரமன்றம் 20.3.2002–ம் தேதி தீர்மானம் எண்.196–ல் 11.3.2002 முதல் ரூ.3.00 லிருந்து ரூ.12.00 ஆக உயர்த்தி வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன் படி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இப்பேருந்து நிலையத்தை சகல வசதிகளுடன் கட்ட திட்டம் அங்கீரிக்கப்பட்டு பொதுப் பணித்துறையினரால்

கட்டிடப் பணி முடிக்கப்பட்டு 15.7.1987 ஒப்படைக்கப்பட்டு மற்றும் சீரமைப்பு பணிகள் 1999 மற்றும் 2012 இல் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

**<u>ஆடு அறுக்குமிடம்</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்குமிடம் ஒன்றுள்ளது. இங்கு அறுக்கப்படும் வெள்ளாடு அல்லது செம்மறி ஆடு ஒன்றுக்கு ரூ.25.00 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது இந்த ஆடு அறுவை சாலையின் 16.1.76—ம் தேதிய உள்ளாட்சித் துறை ஆணை எண்.45—ன் படி இந்த ஆண்டில் காந்தி பிறந்த நாள் மகாவீரர் பிறந்த நாள், திருவள்ளுவர் பிறந்த நாள் மற்றும் வள்ளலார் தினம் ஆகிய நான்கு தினங்களிலும் மூடப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி மாடு அறுவை சாலை ஏதும் நடத்தவில்லை. மேலும் இந்நகரில் தனியார்க்குச் சொந்தமான அங்காடியோ, ஆடு அறுவைசாலையோ அல்லது மாடு அறுவைசாலையோ ஏதுமில்லை. மேலும் ரூ.23.00 லட்சம் மதிப்பீடில் பகுதி—2 திட்டத்தின் கீழ் பயணியர் விடுதி வளாகத்தில் ஒரு பகுதியில் நவீன ஆடு அறுவை கூடம் அமைக்கப்பட்டு புதிய துணை விதிகளும் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

**<u>தொழிற்சாலைகளும், கைத்தொழில்களும்</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 249—ன் படி ஒவ்வொருக்கும் புதியதாக உரிமையாணைகள் வழங்கும் போது அவைகள் யாவும் துப்புரவு ஆய்வர்களாலும் நேரில் பார்வையிடப்படுகிறது. மேலும் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்காக அவைகளின் பேரில் உரிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. இந்நகரில் தொழிற்சாலைகளுக்கான இடம், சிறு கைத்தொழிலுக்கான இடம் என்று தனித் தனியாக இதுவரையில் பிரித்து வரையறை செய்யப்படவில்லை. ஆனால் நகராட்சி முழுமை திட்டத்தின்படி குடியிருப்பு, வாணிப தொழிற்சாலைப் பகுதி விவசாய பகுதி ஆகிவையாக பிரிக்கப்பட்டுள்ளது.

**<u>கலவை எரு(கம்போஸ்டு)</u>**

ஆண்டிற்கு 1600 எம்.டி. எரு உற்பத்தி செய்ய வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது ஆனால் இந்நகரில் மலம் சேகரிப்பு இல்லாத காரணத்தினாலும் பிளாஸ்டிக் கழிவுகளாலும் சாக்கடை மற்றும் மண்ணை அகற்றி உர கிடங்கிற்கு எடுத்து செல்ல போதிய வாகன வசதி இல்லாததாலும் மக்கிய உரம் தயாரிப்பு இல்லை.

**<u>வருமான கணக்கு</u>**

இவ்வாண்டின் சொத்து வரி, தொழில் வரி வட்டி மற்றும் வாகன வரிகள் இணைப்பு 1 முதல் 3 வரையில் குறிப்பிட்டுள்ள விகிதங்களின்படி விதிக்கப்ட்டன. பொது

கணக்கில் இவ்வாண்டில் சாதாரண கணக்குத் தலைப்பில் நிகர வருமானம் ரூ.1884.50 இலட்சம் ஆகும்.

**குடிசை வீடுகள்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 83(5)ன் படி வருட வாடகை மதிப்பு ரூ.180/–க்கும் குறைவாக உள்ள குடிசை வீடுகளுக்கு சொத்து வரி விதிப்பிலிருந்து நிரந்தரமான விலக்கு அளிக்கப்பட்டது.

**தொழில் வரி**

நகராட்சிகளின் சட்டம் ஷெட்யூல் 4 விதி 16–ல் கண்டுள்ள விகிதாச்சாரப்படி இந்நகராட்சியில் தொழில்வரி தொடர்ந்து விதிக்கப்படுகிறது( விவரம் இணைப்பு–2ல் உள்ளது).

**வண்டி வாகன வரி**

தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் ஷெட்யூல்1, விதி 20–ல் கண்டுள்ள விதிகளின் படி வண்டி வாகன வரி இந்நகராட்சியில் வசூலிக்கப்படுகிறது ( விவரம் இணைப்பு–3ல் குறிக்கப்பட்டுள்ளது)

**சினிமா கேளிக்கை வரி**

இந்நகரில் கேளிக்கை வரி டிக்கெட் விற்பனையின் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. இதன் மூலமாக 2018–19 இவ்வாண்டு கிடைத்துள்ள வருமானம் ரு.91320/– ஆகும்.

**வரி விதிப்பும், வரி பாக்கியும்**

அறிக்கையாண்டில் வரியினத்தில் உள்ள பாக்கி ரூ.217.53 இலட்சம் வரி அல்லாத இனத்தில் பாக்கி ரூ.93.06 ஆகும்.

**பொது**

வரவுகளும், செலவுகளும்(வருவாய்நிதி, குடிநீர்நிதி, கல்விநிதி)

| | | |
|---|---|---|
| 2018–19 வரவுகள் | – | ரூ.1884.50 இலட்சம் |
| 2018–19 ஆண்டில் செலவுகள் | – | ரூ.1813.40 இலட்சம் |

**கடன்**

அரசிடமிருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. தற்போது 2018–19 ம் ஆண்டிற்கு அரசிடம் ஏதும் கடன் பெறப்படவில்லை. எனவே கடன் செலுத்த தேவையில்லை.

**முதலீடுகள்**

அறிக்கையாண்டில் மின்சார வாரியத்தில் முதலீடு (டெபாசிட்) யாதும் செய்யப்படவில்லை.

**<u>கணக்கு தணிக்கை</u>**

2018—19 ம் ஆண்டின் கணக்கு உதவி இயக்குனர், உள்ளாட்சி தணிக்கை துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>நகரமைப்புத் திட்டம்</u>**

**<u>விரிவான நகரமைப்புத் திட்டம்</u>**

இந்நகராட்சி 1960—ம் ஆண்டிலேயே மூன்று நகரமைப்பு திட்டங்களை மேற்கொண்டு 1920—ம் வருடத்திய நகரமைப்புச் சட்டம் பிரிவு 12—ன்படி விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

1.நகரமைப்புத் திட்டம் எண்.1

2.நகரமைப்புத் திட்டம் எண்.2

3.நகரமைப்புத் திட்டம் எண்.3

**<u>உள்ளூர் முழுமைத் திட்டம்</u>**

16.3.1974—ம் தேதிய அரசாணை எண்.650 ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் படி இந்நகராட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தை மட்டும் உள்ளூர் திட்டக்குழு பிரதேசமாக அறிவித்துள்ளது.

செங்கல்பட்டு உள்ளூர் திட்டப் பகுதி தற்போது முழுமைத் திட்டம் நகர் மற்றும் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களால் தற்போதுள்ள பயன்பாட்டின்படி தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் திட்டக் குழு ஒப்புதலுக்கு பின் அரசின் அதிகாரம் பெறப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரம் பெற்ற திட்டத்தினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒப்புதலுக்குப் பின் விரிவான முழுமை திட்டத்திற்கான வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் தயார் செய்யப்படும்.

**<u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1</u>**

இந்நகரமைப்புத் திட்டம் 1920—ம் வருடத்திய நகரமைப்பு சட்டம் பிரிவு 12—ன் படி அரசினரால் 20.3.1960—ம் தேதிய அரசு ஆணை எண்.1397— எல்.ஏ.வில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பரப்பளவு 276 ஏக்கர் ஆகும் (111.70 ஹெக்டேர்) நகரமைப்பு இயக்குநரால் வழங்கப்பட்ட திட்டம் எண்.2—ன்படி பெரும் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதில் திட்டப்படி அமைக்கப்பட வேண்டிய பகுதி மிக மிக சொற்பமே. ஆகவே இத்திட்டத்தை கைவிட்டு விடலாம் என நகரமைப்பு இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது. நகரமைப்பு இயக்குநர் தற்போது உள்ளவாறு திட்ட வரைபடம்

சமர்ப்பிக்கும்டி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பும்படி இயக்குநர் உத்திரவிட்டுள்ளார். நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் திட்ட வரைபடம் தயார் செய்து சமர்ப்பித்துளளார். அதனை உள்ளூர் திட்டக்குழு முன் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது. இதன் பேரில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் தினசரி நாள் இதழில் பிரசுரம் செய்யப்பட்டது. வரைபடம் இரண்டின் பேரில் உள்ளூர் திட்ட பகுதி நபர்கள் கூட்டம் 25.2.94–ம் தேதி நடைபெற்றது. ஆட்சேபனையும் ஆலோசனையும் பெற்று அதனை உள்ளூர் திட்டக்குழுவின் ஒப்புதல் பெற்று அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2.</u>**

இந்நகரமைப்பு திட்டம் 23.1.1960–ம் தேதிய அரசு ஆணை எண்.271 எல்.ஏ.வின் படி 1970–ம் வருடத்திய நகரமைப்பு சட்டம் பிரிவு 12–ன்படி விளம்ரபப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பரப்பு 91 ஏக்கர் அல்லது 36.62 ஹெக்டேர் திட்டத்தில் அடங்கியுள்ள இடம் முழுவதுமாக திட்ட வரைபடத்தின்படி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டப் பகுதி முழுவதும் ஒப்புதல் பெற்ற வீட்டு மனைப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே இதை இத்துடன் கைவிட்டு விடலாம் என நகரமைப்பு இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது. இயக்குநர் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு தற்போதுள்ளவாறு திட்ட வரைபடம் தயார் செய்து அனுப்ப உத்திரவிட்டுள்ளார். நகரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் திட்ட வரைவினை தயார் செய்து சமர்ப்பித்துள்ளார். மேற்படி திட்டத்திற்கு உள்ளூர் திட்க்குழு ஒப்புதல் பெறப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பேரில் தினசரி நாள் இதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. வரைபடம் இரண்டின் பேரில் கட்டிட உரிமையாளர் கூட்டம் 25.2.94–ல் நடைபெற்றது. அதில் ஆட்சேபனையும் ஆலோசனையும் பெறப்பட்டது. அதன் பேரில் உள்ளூர் திட்டக்குழு ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை எடுத்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**<u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3</u>**

இந்நகரமைப்புத் திட்டம் அரசினரால் 1970–ல் வருடத்திய நகரமைப்புத் திட்டம் அரசினரால் 1970–ம் வருடத்திய நகரமைப்பு சட்டம் 12ன்படி 23.2.1960–ம் தேதிய அரசு ஆணை எண்.271 எல்.ஏ.வின்படி விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. திட்ட வரைபடத்தின் படி முழுமையாக இந்தப் பகுதி விடுபட்டுவிட்டது. மேற்கொண்டு இதை நீடித்துக் கொள்வதில் எவ்விதி உபயோகமும் இல்லை. ஆகவே இத்திட்டத்தையும் கைவிட்டு விட

நகரமைப்பு இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது. ஆனால் இயக்குநர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு தற்போது உள்ளவாறு திட்ட வரைபடம் தயார் செய்து சமர்ப்த்துள்ளார் மேற்படி திட்டத்தினை உள்ளூர் திட்டக்குழு ஒபுதல் பெறப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்க மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் தினசரி நாள் இதழில் பிரசுரம் செய்யப்பட்டது. வரைபடம் இரண்டின் பேரில் கட்டிட உரிமையாளர்களின் 25.2.94–ம் தேதிய கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை பெறப்பட்டது. அதன் பேரில் உள்ளூர் திட்டக்குழு ஒப்புதல் பெற்றது. அரசின் ஒப்புதலுக்கு அனுப்பபட உள்ளது.

தற்சமயம் இந் நகரில் உள்ள 1, 2, மற்றும் 3 ஆகிய விரிவு அபிவிருத்தி திட்டங்களில் மீண்டும் மறு அமைப்பு (Redevelopment) செய்ய உத்தேசித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம், அவர்களால் ந.க.எண்.2176/2010/செம3 நாள் .3.2013 கடிதத்தில் செங்கல்பட்டு உள்ளர் திட்டக் குழுமம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 2 மற்றும் 3 நகர் ஊரமைப்பு ச்ட்டம் 1971 பிரிவு 25 ன் கீழ் இணைக்கத்திற்கு சமர்ப்பித்து உள்ளூர் திட்டக் குழுமத்தில் பொருள் வைத்து ஒப்புதல் பெற்று தர தெரிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 2, மற்றும் 3 லினை மீண்டும் செயல்படுத்திடவும் இது தொடர்பாக உள்ளூர் திட்ட குழுமத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு தீர்மான எண்.232 நாள் 24.4.2013ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது..

## <u>பாதாள சாக்கடை திட்டம்</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொளவாய் ஏரியில் கழிவு நீர் கலந்து மாசு அடைவதால் அதனை தடுக்கும் பொருட்டு திருக்கழுக்குன்றம் வட்டம், புல்லேரி கிராமத்தில் ( செங்கல்பட்டு நகரில் இருந்து 8 கி.மீ கிழக்கு பக்கமாக உள்ளது) புல எண். 71/பி ல் 9.42 ஹெக்டேர் மேய்க்கால் நிலம் உத்தேசிக்கப்பட்டு அரசின் இசைவுடன் மேற்படி இடம் நகராட்சிக்கு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இத் திட்டத்திற்கு நகர மன்றம் தனது தீர்மான எண். 927 நாள் 7.9.2001 ல் அனுமதி அளிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க புல்லேரி ஊராட்சி மன்றம் ஒப்புதல் வழங்கும் வகையில் தீர்மானம் எண். 9/29.5.2005ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி நிலத்தில் தொழில் நுட்ப ரீதியாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சோதனைக் கட்டணமாக ரூ. 16.00

இலட்சம் வழங்க இந் நகர மன்றம் தீர்மானம் எண். 1080 நாள் 28.5.2008ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரிய மூலம் ஆய்வு செய்து ( கடித எண். 716/TNPCB/2730/KPM/ORANGE/2007 நாள் 8.2.2008) இல் தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அம்சங்களை பரிசீலனை செய்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ந.க.எண்.78284/2003/அ3 நாள் 8.6.2007ல் கடித மூலம் இத் திட்டத்தை செயல்படுத்த நில நிர்வாக துறை அவர்களுக்கு பரிந்துரை செய்து அறிக்கை அனுப்பியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை நில நிர்வாக துறை ஆணையரால் பரிசீலனை செய்யப்பட்டு இத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க கடித எண். 5787/2006/பி2 நாள் 5.9.2008 மூலம் தலைமை செயலக வருவாய் துறை செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு செயலாளர் அவர்கள் தனது கடிதம் ந.க.எண்.62112/நிமு5(1)2005–2006 நாள் 26.2.2009ந் தேதிய கடிதத்தில் இந் நிலம் மேய்கால் புறம்போக்கு நிலமாக உள்ளதால் கால்நடைத் துறையின் தடையில்லா சான்று (NOC) பெற தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அவர்களுக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 9.420 ஹெக்டேர் நிலத்திற்கு மாற்று இடம் கோரி ந.க.எண். 78284/2012 /அ3 நாள் 13.5.2012ல் கடிதம் அனுப்பியுள்ளார். இத்திட்டத்தை செயல்படுத்த ஆரம்ப பணிகளுக்காக UGSS திட்டத்திற்கு 4.7.2012ல் செங்கல்பட்டு நகராட்சிக்கு அரசால் ஒரு கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைபடி பாதாள சாக்கடை திட்டத்திற்கு இணைப்பு வழங்க பொது மக்களிடம் இருந்து முன் வைப்புத் தொகை வசூலிக்கும் பணியை இந் நகராட்சி நடைமுறை படுத்தி வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செங்கல்பட்டு நகராட்சி பணிகளை 8.6.2012 அன்று ஆய்வு செய்தபோது பாதாள சாக்கடை திட்டம் குறித்து இடம் தேர்வு செய்ததில் புல்லேரி நிலத்திற்கு ஈடாக மாற்று இடம் தேர்வு செய்யுமாறு வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அவர்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து அனுப்புமாறு கோரப்பட்டுள்ள கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு இவ்வலுவலக ந.க.எண்.5847/2007/சி1 நாள் 8.8.2012 மற்றும் 3.9.2012 ல் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்கள்

திருக்கழுக்குன்றம் வட்டம் புல்லேரி கிராமம் புல எண். 71/பி மேய்கால் 9.420 ஹெக்டேர் நிலத்தினை செங்கல்பட்டு நகராட்சி நில உரிமை மாற்றம் செய்ய இத் திட்டத்தின் அவசரம் மற்றும் அவசியம் கருதி அரசிடமிருந்து ஆணையை பெற்று தருமாறு கேட்டும், செங்கல்பட்டு வட்டம், வேதநாராயணபுரம்புல எண்., 96/1 தேவர்மலை புறம்போக்கு மொத்த பரப்பு 34.86.5 ஹேக்டேரில் 9.420 ஹேக்டேர் பரப்பை மேய்கால் புறம்போக்கு இடம் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு டிதம் எண். 78284/2003/ஆ3 நாள் 16.10.2012 ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நில நிர்வாக வருவாய் ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து முதன்மை செயலாளர் வருவாய் துறை அவர்களுக்கு கடித எண். 23914/2009/பி1 நாள் 20.10.2012ல் பிரேரனை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசு துணை செயலாளர் வருவாய் துறை, தலைமை செயலகம், சென்னை–9 அவர்களின் கடிதம் ந.க.எண். 45465/நிமு5(1)2012–1 நாள் 8.3.2013ல் புதிய செயற்குறிப்பினை உரிய மூல ஆவணங்களுடன் உடனடியாக அரசுக்கு அனுப்ப கோரி முதன்மை செயலாளர் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் இது சம்மந்தமாக புதிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மீண்டும் செங்கல்பட்டு நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் அரசு செயல்படுத்த உத்தேசித்து அதற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்து (திருக்கழுக்குன்றம் புல்லோரி கிராமம் புல எண். 71பி) மேற்படி பிரேரனை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கடித ந.க.எண்.30350/2013/அ3 நாள் 28.2.2015ல் நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நில நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் செங்கல்பட்டு நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த எதுவாக திருக்கழுக்குன்றம் வட்டம் புல்லேரி கிராமம் ச.எண். 71/பி இல் 9.42.0 ஹேக்டேர் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அதற்கு மாற்று நிலம் மேய்ச்சல் நிலமாக மாற்றம் செய்ய ஆலப்பாக்கம் பஞ்சாயத்து வேதநாராயணபுரம் கிராமம் சர்வே எண். 96/1 ல் 9.42.0 ஹெக்டேர் (அரசு புறம்போக்கு) கண்டறியப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கு கால்நடை பராமரிப்பு துறையின் தடையில்லா சான்று பெற்று அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

அரசு ஆணையின்படியும் கால்நடை துறை அரசு செயலர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படியும் ஆலப்பாக்கம் ஊராட்சியில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி 9.42.0 ஹேக்டேர் நிலத்தினை

மேய்க்கால் நிலமாக மாற்றுவதற்கான கட்டணம் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் கருவூலத்தில் ரூ.1,41,300/— ஐ செங்கல்பட்டு நகராட்சியால் செலுத்தப்பட்டது. இதனிடையே மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் இணை இயக்குனர் கால்நடை பராமரிப்பு துறை அவர்களுடன் கூட்டு ஆய்வு செய்து அதன் அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களுக்கு அனப்பி அதனை மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்த நிலையில் நில நிர்வாக ஆணையர், கால்நடை பராமரிப்பு துறையின் தடையில்லா சான்று பெற்றும் மேலும் சில விவரங்கள் கோரியும் மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரம் அவர்களக்கு கடிதம் எண். பி1/23914/2009/ நாள் 31.3.2016) அனுப்பி வைக்கப்பட்டது. புல்லேரி கிராமதத்திலுள்ள மேற்படி இடம் கால்நடைத் துறைக்கு சொந்தமான மேய்க்கால் நிலம் என்பதால் இயக்குனர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை—5 அவர்கள் கடிதம் ந.க.எண். 5017/2012/அ2 நாள் 18.4.2017ல் அன்று தடையில்லா சான்று வழங்க கோரி அரசு முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இதனை தொடர்ந்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் அரசு செயலர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அவர்களுக்கு முகவரி இடப்பட்ட கடிதத்தில் (எண்.பி1/23914/2009 நாள் 01.09.2017) மேற்காணும் நிலத்தினை வகைப்பாடு மாற்றம் செய்யலாம் என அரசு செயலர் வருவாய் மற்றும் பேரிடம் மேலாண்மை துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை 28 அவர்களுக்கு சிறப்பு அறிக்கை ந.க.எண்.5847/எப்1/2007 நாள் 23.04.2019 அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**<u>பொது</u>**

அறிக்யைாண்டில் வரி இனத்தில் நடப்பு கேட்பில் ரூ.1,30,43,000/— வரியில்லாத இனத்தில் ரூ.83,86,000/— வசூல் செய்யப்பட்டு கேட்பு வரியினத்தில் ரூ3,51,48,000/—ம் வரியில்லா இனத்தில் ரூ.86,36,000/— வசூல் செய்யப்பட்டது.

**நவீன உரகிடங்கு (Modern Compostyard)**

செங்கல்பட்டு நகருக்கு என தற்போது உரகிடங்கு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பயன்படுத்தக் கூடாது. புதிதாக இடம் தேர்வு செய்து அதில் நவீன முறையில் உர கிடங்கு அமைத்து 2025 ல் ஆண்டு மக்கள் தொகையை உரக்கிடங்கு அதன்படி உரகிடங்கு அமைக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

எனவே இது தொடர்பாக உத்திரமேரூர் தாலுக்கா 89 பழவேலி கிராமப்புல எண்.260, 261/1சில் 11.15 ஏக்கர் நிலம் வாங்க உத்தேசித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்த விலைக்கு செண்ட் ரூ.575/— வீதம் 4.82 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து வாங்கப்பட்டது. மீதமுள்ள 6.33 ஏக்கர் நிலம் உரிமையாளர்கள் நகராட்சிக்க தர மறுக்கவே கட்டாய நில ஆர்ஜித சட்டப்படி நில ஆர்ஜிதம் செய்ய அரசு ஆணை எண்.147 நாள் 4.12.2006 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. தற்போது நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மொத்த இடமும் கிடைத்த பின்பு மேற்படி இடத்தில நவீன உரகிடங்கு பயன்படுத்தப்பட உள்ளது. நில ஆர்ஜிதம் தொடர்பாக வட்டாட்சியர் உத்திரமேரூர் அவர்களின் புல தணிக்கை அறிக்கை வருவாய் கோட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பி இருந்த நிலையில் மீண்டும் நினைவூட்டு கடிதம் 07.06.2019ல் வருவாய் கோட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது. நகல் வட்டாட்சியர் உத்திரமேரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**<u>பொது நலம்</u>**

**<u>பிறப்பு, இறப்பு புள்ளி விவரம்</u>**

இந்நகரில் ஏற்படும் பிறப்பு, இறப்பு பதிவுகளை செவ்வனே செய்வதற்கு வசதியாக இந்நகரத்தினை அ, ஆ மற்றும் இ என மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது. இரண்டு துப்புரவு ஆய்வாளர் மட்டுமே இப்பணியினை செய்து வருகிறார்கள். . சமீபத்தில் அரசினரால் திருத்தியமைக்கப்பட்ட 1977—ம் வருடத்திய பிறப்பு இறப்பு முதலிய விவரங்கள் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதில் சிரமம் ஏதுவுமில்லை. இந்நகராட்சியின் பிறப்பு இறப்பு பதிவு செய்யும் வேலை நேரம் அலுவலக வேலை நாட்களில் மாலை 2.00 மணி முதல் 5.00 மணி வரை செய்யப்படும் என்றும் அறிவிப்பு பலகை இந்நகராட்சி அலுவலகத்தில் எழுதி பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை ஆண்டில் பதிவு செய்யத் தவறி கண்டுபிடிக்கப்பட்ட பிறப்பின் எண்ணிக்கை 16 இறப்பின் எண்ணிக்கை 15 ஆகும். காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் நபர்களிடம் இருந்து சட்டபடி உரியத் தொகை வசூலிக்கப்படுவதால் சம்மந்தப்பட்ட நபரின் மீது வழக்கு ஏதும் தொடரவில்லை.

மேற்படி துப்புரவு ஆய்வர் தினசரி பிறப்பு இறப்பு சம்மந்தமாக விவரங்களை கண்டறிந்து உடனுக்குடன் பதிவு செய்வதால் எந்நபர் மீதும் இந்நகராட்சியால் இது விஷயமாக வழக்கு தொடரவில்லை. துப்புரவு ஆய்வாளர்களும் துப்புரவு பணி

மேற்பார்வையாளர்களும் அன்றாடம் தாங்கள் பகுதிகளில் ஏற்படும் பிறப்பு, இறப்பு விவரங்களை உடனுக்குடன் கண்டுபிடிக்கப்படுவதுடன் காலம் கடந்த பதிவு செய்வதற்கு உரிய கட்டணத்தை செலுத்தி பிறப்பு இறப்பு விவரங்களை பதிவு செய்யலாம் என பொது மக்களுக்கு விளக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது பிறப்பு, இறப்பு பதிவுகளை செய்வதற்காக இவ்வாண்டில் தனி நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

<u>பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்கள்</u>

| | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண். | விகிதம் | எண். | விகிதம் | எண். | விகிதம் | எண். | விகிதம் |
| பிறப்பு | 10724 | 90 | 110929 | 90 | 11126 | 92 | 10984 | |
| இறப்பு | 1805 | 90 | 1614 | 90 | 1702 | 92 | 1900 | |
| காலரா இறப்பு | | – | – | – | | – | | |
| பெரியம்மை, இறப்பு, பிளேக் இறப்பு | | – | – | – | | – | | |
| மலேரியா அல்லது இதர காச்சல் இறப்பு | | – | – | – | | – | | |
| வயிற்று கடுப்பு, பேதி | | – | – | – | | – | | |
| நுரையீரல் காச நோயினால் இறப்பு | | – | – | – | | – | | |
| காசநோயில்லாத மற்றும் சுவாச மண்டல நோய்களில் இறப்பு | | – | – | – | | – | | |
| தாய்மை பிரசவ இறப்பு | | – | – | | – | – | | |
| பிறந்து இறந்த சிசுக்கள் | | | | | | | 1 | |

கடந்த ஐந்தாண்டுகளின் அதாவது 2016–17 இறப்பு விவரங்கள் சராசரியும் 2017–18–ம் ஆண்டில் ஏற்பட்டுள்ள பிறப்பு இறப்பு விவரங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் குறைந்துள்ளது.

**<u>1.காலரா</u>**

இந்நோய் இந்நகராட்சி எல்லையில் யாருக்கும் பிடிக்கவில்லை இறப்பு ஏதுமில்லை. எதற்கும் தடுப்பு நடவடிக்கைக்காக நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி இவ்வாண்டில் போடப்படவில்லை.

**<u>2.கடும் வயிற்று போக்கு</u>**

இவ்வாண்டில் இந்நோயினால் எவரும் இறக்கவில்லை

**<u>3.பேதி மற்றும் சீதபேதி</u>**

இவ்வாண்டில் இந்நோயினால் யாரும் இறக்கவில்லை. மேலும் இந்நோய் பிடிக்கப்பட்ட நபர்களுக்கு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.

**4.டைப்பாய்டு காச்சல்**

இறப்பு ஏதும் இல்லை

**5.நுரையீரல் காச நோய்**

இந்நோயினால் இவ்வறிக்கையாண்டில் ஒருவரும் இறக்கவில்லை. மேலும் இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களை செங்கல்பட்டு அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**6.மலேரியா**

இந்நோயினால் இவ்வாண்டு யாரும் இறக்கவில்லை

**7.இதர காய்ச்சல்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமீல்லை

**8.கலா ஆசார்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**9.குஷ்டநோய்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**10.கினியவாதம் நோய்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**11.உக்வாம்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**12.யானைக்கால் நோய்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**13.பெரியம்மை நோய்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**14.சிறியம்மை**

சிறியம்மை நோய் கண்டர்கள் எவரும் இல்லை.

**15.பிளேக்**

இறப்பு ஏதுமில்லை

**16.விளையாட்டு அம்மை**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**17.இன்புளியன்சா**

இறப்பு ஏதுமில்லை

**18.வெறிநாய் கடி**

இந்நோயினால் யாரும் பாதிக்கப்படவில்லை இவ்வாண்டில் உரிமையாணை பெறாத நாய்கள் யாதும் பிடிக்கப்படவில்லை.

**<u>19.மூளை பாதிப்பு நோய்</u>**

இந்நோயினால் யாரும் இறக்கவில்லை.

**<u>20.இளம்பிள்ளை வாதம்</u>**

இந்நோயினால் யாரும் பீடிக்கப்பட்டு இறக்கவில்லை

**<u>21.டெட்டனஸ்</u>**

இந்நோயினால் யாரும் இறக்கவில்லை

**<u>22.தொண்டை அடைப்பான் நோய்</u>**

இந்நோயினால் யாரும் இறக்கவில்லை

**<u>23.கக்குவான் இருமல்</u>**

இந்நோயினால் யாரும் இறக்கவில்லை

**<u>24.மஞ்சள் காமாலை</u>**

இவ்வாண்டில் இந்நோயினால் யாரும் இறக்கவில்லை இந்நோய் சம்மந்தமான தடுப்பூசி போடுவது அல்லது அம்மை குத்துவது போன்ற தனி நடவடிக்கை ஏதும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. தற்காலிக மருத்துவமனையோ அல்லது நடமாடும் மருந்தகமோ அமைக்கவில்லை. இந்நகராட்சியில் பொது சுகாதாரம் சட்டம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் தொத்து நோய்கள் பற்றிய சட்டம் இவைகளில் நிபந்தனைகள் ஆகிய சட்ட திட்டங்களைக் கொண்டு நடைமுறையில் கையாளப்பட்டது.

பெரியம்மை மற்றும் பிளேக் நோய்களால் இவ்வாண்டில் பிடிக்கப்பட்டு யாரும் இறக்கவில்லை.

**25. டெங்கு காய்ச்சல்—**

டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது இவ்வாண்டில் இந் நோயினால் யாரும் இறக்கவில்லை. மேலும் தொடர் நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**26. சிக்கன்குனியா—**

சிக்கன்குனியா நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாண்டில் இந் நோயினால் யாரும் பாதிக்கப்படவில்லை. இது தொடர்பாக நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**<u>2016—2017ம் ஆண்டில் ஒவ்வாரு மாதமும் இவ்வாண்டில் காலரா நோயினால் பிடிக்கப்பட்டு இறந்தவர்களின் விவரம் கீழ் வருமாறு</u>**

| மாதம் | காலரா நோயினால் பிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | காலரா நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்க |
|---|---|---|

ஜனவரி 2015 முதல் இறப்பு ஏதுமில்லை –
டிசம்பர் 2015 வரை

காலரா, பெரியம்மை மற்றும் பிளேக் போன்ற தொத்து நோய்களின் நிரந்தர பிரதேசமாக இந்நகரமில்லை.

**3.மலேரியா, யானைக்கால் நோய் தடுப்பு முறைகள்**

**1.மலேரியா நோய் ஒழிப்பு**

இந்நகராட்சியில் மலேரியா ஒழிப்பு திட்டம் ஏதும் மேற்கொள்ளவில்லை. நகராட்சி சுற்றியுள்ள பகுதிகளில் கொசு மருந்து அடிக்கப்பட்டு வருகிறது.

**2.யானைக்கால் நோய் ஒழிப்பு**

1960–ம் ஆண்டு முதல் யானைக்கால் நோய் ஒழிப்பு திட்டம் இந்நகராட்சியில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் களப்பணியாளர் (பீல்டு அசிஸ்டெண்டு) யாரும் அமர்த்தப்படவில்லை. இவ்விடத்தை பூர்த்தி செய்வதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் துப்புரவு ஆய்வர் ஒருவர் தன்னுடைய அன்றாடப் பணியோடு கொசு ஒழிப்புப் பணியையும் சேர்த்து மேற்பார்வை செய்து வருகிறார். இந்நகராட்சியில் 3 துப்புரவு தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

1.1.1981 முதல் இந்நகரில் கொசு எண்ணெய் அடிக்கும் பணியானது நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கொசு ஒழிப்பு மருந்து எண்ணெய் தெளிப்பான்கள் மூன்று உபயோகிக்கப்பட்டன.

கிணறுகள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகுமிடங்களடங்கிய பட்டியலை தயாரித்துக் கொண்டு இவ்விடங்களில் கொசுகள் வளராமல் இருக்கவும் அவைகள் உற்பத்தியாகாமல் இருக்கவும் கொசு எண்ணெய் தொடர்ந்து தெளிக்கப்படுகிறது. இந்நகரில் இத்திட்டம் செயல்படும் முறை பற்றி தஞ்சாவூரிலுள்ள முதுநிலை பூச்சியில் வல்லுநர் அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு நடத்துகிறார்கள். திட்டம் பற்றி இந்த அலுவலர் ஆய்வு செய்து குறைகள் ஏதாவது இருப்பின் அதனை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் மீது அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைகள் யாவும் அவ்வப்போது களையப்படுகின்றன.

**4.தொழுநோய்**

தொழுநோய் பற்றிய சர்வே ஏதும் இந்நகரில் மேற்கொள்ளப்படவில்லை இந்நோயினால் இவ்வாண்டில் இறப்பு ஏதுமில்லை. தொழுநோயினால் பீடிக்கப்படும் நோயாளிகள் இந்நகராட்சி எல்லையை ஒட்டி கிழக்கு பக்கத்தில் 5 கிலோ மீட்டர்

தொலைவிலுள்ள திருமணி கிராமத்தில் அமைந்துள்ள மத்திய தொழுநோய் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக உரிய சிகிச்சைகளை தொடர்ந்து பெற்று வருகிறார்கள்.

**5.கலா ஆசார்**

இறப்பு ஏதுமில்லை

**5.(அ) கினியவாதம்**

இறப்பு ஏதுமில்லை

**6.தாய் சேய் நலம்**

நத்தம் குண்டூர் மற்றும் அனுமந்தப்புத்தேரி ஆகிய பகுதிகளில் இந்நகராட்சி தொடர்ந்து மூன்று தாய்சேய் நல விடுதிகளும் மற்றும் அனுமந்தபுத்தேரியில் தாய்சேய் நலவிடுதியுடன் நகர்புற நல மையமும் சேர்ந்து செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு தாய் சேய் நல விடுதியிலும் ஒரு மகப்பேறு உதவியாளரும் ஒரு ஆயாவும் பணியாற்றி வருகிறார்கள். இவர்களின் அன்றாடப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கென சுகாதார பார்வையாளர் இடம் காலியாக உள்ளது இத்தாய் சேய் நல விடுதிகளில் படுக்கை வசதிகள் ஏதும் இல்லை. நகர் நல அலுவலர் பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. அனுமதிக்கப்பட்ட 5 துப்புரவு ஆய்வர் பணியிடங்களில் தற்போது ஒரு துப்புரவு ஆய்வர்கள் பணியாற்றுகிறார்கள். மகப்பேறு உதவியாளர்கள் 2 நபர்கள் பணியாற்றுகிறார்கள். மகப்பேறு ஆயாகள் 2 பணியிடம் காலியாக உள்ளது.

| | | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 |
|---|---|---|---|---|---|
| 1. | பதிவு செய்யப்பட்ட மகப்பேறு கால தாய்மார்களின் எண்ணிக்கை | 1544 | 1559 | 1626 | 751 |
| 2. | பார்க்கப்பட்ட பிரசவங்களின் எண்ணிக்கை | – | – | – | 630 |
| 3. | பேறுகாலத்திற்கு முன் பார்க்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை | 6459 | 6474 | 7001 | 630 |
| 4. | பேறுகாலத்திற்கு பின் பார்க்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை | 6731 | 6747 | 7098 | 629 |
| 5. | பார்வையிடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | 6579 | 6594 | 7037 | 5042 |
| 6. | பள்ளி செல்லும் வயதிற்கு முன்னாள் உள்ள பிள்ளைகள் பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை | 7488 | 7503 | 7606 | |

இவ்வாண்டில் மாவட்ட சுகாதார மற்றும் குடும்ப நல அலுவலர்(காஞ்சிபுரம்) அவர்கள் மூலமாக இந்நகராட்சி தாய்சேய் நல விடுதிகளின் உபயோகத்திற்காக இலவசமாக(யுனிசிப்) விட்டமின் மாத்திரைகள் மற்றும் தடுப்பூசி மருந்துகளும் வழங்கப்பட்டன. இவைகளை மகப்பேறு தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும்

வழங்கப்பட்ட விவரம் கீழே குறிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியால் தாய்சேய் நல பராமரிப்புக்காக மாத்திரை மருந்துகள் வாங்கி வழங்கியுள்ளது.

தாய்மார்களும் கர்ப்பிணிகளும், குழந்தைகளுக்கும் சொரி, சிரங்கு, பேதி ஜீரம் போன்ற வியாதிகளுக்கு மருந்துகள் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

| | | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 |
|---|---|---|---|---|---|
| 1. | பேறுகால முன் தாய்மார்கள் மற்றும் பால் கொடுக்கும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட சத்து மாத்திரைகள் | 15012 | 15027 | 15066 | 7510 |
| 2. | பள்ளி செல்லும் வயதிற்கு முன்னாள் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட இரும்பு சத்து டானிக் | – | – | – | 2517 |
| 3. | வைட்டமிப் ஏ சொல்யூஷன் பெற்ற குழந்கைளின் எண்ணிக்கை | 13852 | 13867 | 13938 | 5034 |

<u>5 வயதிற்கு கீழேயுள்ள குழந்தைகளுக்கு முன் நோய் தடுப்பு மருந்து</u>

ஐ.எல்.ஆர்.ஜீப் பெட்டிகள் நகராட்சிக்கு டி.டி,ஓ சைதாப்பேட்டை, சென்னை அவர்களால் வழங்கப்ட்டு தடுப்பு ஊசி மருந்து பாதுகாத்து மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது

| | வழங்கப்பட்ட விவரம் | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 |
|---|---|---|---|---|---|
| 1. | பி.சி.ஜி | 2896 | 2908 | 2942 | 750 |
| 2. | பெண்டா,முதலளவு | 2896 | 2908 | 2942 | 750 |
| 3. | பெண்டா,இரண்டாவது அளவு | 2936 | 2948 | 2996 | 752 |
| 4. | பெண்டா.மூன்றாவது அளவு | 2936 | 2948 | 2963 | 754 |
| 5. | டி.பி.டி.பூஸ்டர் டோஸ் | 2950 | 2952 | 2968 | 756 |
| 6. | போலியோ முதலளவு | 2896 | 2908 | 2919 | 756 |
| 7. | போலியோ இரண்டாவது அளவு | 2936 | 2948 | 2962 | 752 |
| 8. | போலியோ மூன்றாவது அளவு | 2936 | 2948 | 2962 | 754 |
| 9. | போலியோ | 2936 | 2908 | 2939 | 767 |
| 10. | மீஸ்லஸ் | 2936 | 2942 | 2956 | 762 |
| 11. | டி.டி | 2832 | 2846 | 2863 | 751 |
| 12. | டி.டி. 10 வயது | 3642 | 3648 | 3661 | 6734 |
| 13. | டி.டி. 16 வயது | 3234 | 3234 | 3252 | 8940 |
| 14 | டி.டி. | 2806 | 2817 | 2898 | 754 |

குடும்ப நல திட்டம் பற்றியும் அதனால் விளையும் நலன்கள் குறித்தும் பொது மக்களிடம் இந்நகராட்சி பொது நலப்பபிரிவில் பணியாற்றும் அலுவலர்களாலும் ஊழியர்களாலும் எடுத்துரைக்கப்பட்டது தவிர அறுவை சிகிச்சையின் அத்தியாவசியம்

பற்றியும் பொது மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும் பெண்களுக்கு நவீன அறுவை சிகிச்சை மையம் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள குடும்ப நலப்பிரிவில் செயல்பட்டு வருகிறது..

## 7.நகர சுகதாரம்

சுகாதாரப் பணிகள் செவ்வனே நடைபெறும் பொருட்டு இந்நகரத்தினை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. துப்புரவு தொழிலாளர்களின் பணிகளை கண்காணிப்பதற்காக 1 துப்புரவு ஆய்வர்களும் 2 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

நகரில் சேரும் குப்பையை அகற்றுவதற்காக இவ்வலுவலகத்தில் குப்பை எடுக்கும் லாரி 2 உள்ளது. இந்த லாரியை ஓட்டுவதற்காக ஒரு லாரி ஓட்டுநர் வீதம் 2 ஓட்டுநர்கள் உள்ளார்கள். டராக்டர்–2, ஆட்டோ–1, டம்பர் பிளேசர் லாரி–1, முதலிய குப்பை எடுக்கும் வாகனமாக உள்ளது. மேலும் நாய்கள் பயண வாகனம் –1, கொசு ஒழிப்பு பயன்படும் ஆட்டோ–2 உள்ளது. இவ்வாண்டில் மொத்தம் 104 துப்புரவு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களில் 81 நபர்கள் குப்பையை அகற்றவும் 20 நபர்கள் நகரில் உள்ள சாக்கடை கால்வலய்களை தள்ளுவதற்கும் 4 நபர்கள் கம்போஸ்டு உரம் தயாரிப்பதற்கும் மீதியாகவுள்ள 2 நபர்கள் கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் கொசு எண்ணெய் தெளிக்கவும் பயன்படுத்தப்பட்டார்கள்.

இந் நகராட்சியில் போதுமான துப்புரவு பணியாளர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ளது. எனவே பொது சுகாதார பணிகள் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.26729/2017/பி3 நாள் 20.12.2017 படி அனுமதித்துள்ள 48 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியினை 23–33 வார்டுகளில் தனியார் மயமாக்கப்பட்டு 1.10.2013முதல் செயல்பட்டு வருகிறது.

இந்நகரில் மொத்தம் 8 பொதுக் கழிப்பறைகள் உள்ளது அவற்றில் 3 சமுதாய கழிப்பறைகளும் (செப்டிக் டேங்க்) ஒரு பொதுக் கழிப்பிடமும் அடங்கும். 1.ராமபாளையம் 2. அனுமந்தபுத்தேரி, 3.கரிமேடு 4.நகராட்சி தினசரி மார்க்கேட் கட்டண கழிப்றைகள் 2 5) குண்டூர், 6) தூக்குமரக்குட்டை ஆகிய இடங்களில் உள்ளது இவற்றில் புதிய பேருந்து நிலையத்தில் ஒன்றும் செயல்படுகிறது.

இந்நகரில் சேரும் குப்பையை குப்பை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலமாக அகற்றப்பட்டது.

## 8.சந்தைகளும் உற்சவங்களும்

இந்நகராட்சி வார சந்தை ஏதும் நடத்தப்படவில்லை. அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட உற்சவம் ஏதும் இந்நகரில் இல்லை.

**8. அ)** தசரா பண்டிகை உற்சவம் தனியார் மூலம் ரூ.**11,68,652/—**க்கு குத்தகை விடப்பட்டு நடந்து வருகிறது.

**9.பொது சுகாதாரப் பிரச்சாரம்**

பொது மக்களிடையே பொது நலப்பிரிவு ஊழியர்கள் மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் திரையரங்குகளில் சினிமா சிலைடுகள் காட்டுவதின் மூலமாகவும் சுகாதாரப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டது.

**10.நகரில் வீடுகளின் அமைப்பு**

இவ்வாண்டில் மொத்தம் **206** வீடுகள் மற்றும் கடைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

புதியதாக வீடுகள் கட்டுவதற்குரிய கட்டிட உரிமையாணைகள் வழங்கும் போது சுகாதார வசதிகளை செய்யுமாறும் பொது நல சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள் பற்றியும் தெரிவித்து அதன்படியே வீடுகளை கட்ட வேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகிறது. இந்நகர மக்கள் குடியிருப்பு பகுதி எனவும் தனித்தனியாக வரையறுக்கப்பட்டு முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீாரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் இந்நகரில் தெற்கு பகுதியில் 7 பிரிவுகள் கொண்ட 42 வீடுகள் மாத வாடகை அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டு அரசு ஊழியர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**11.உணவுக் கலப்படம்**

இந்நகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலர் இல்லாததால் உணவு கலப்பட மாதிரிகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

**12.இதர பொது சுகாதார நடவடிக்கைகள்**

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூாரி மருத்துவமனயை சேர்ந்த டாக்டர்களால் இவ்வாண்டும் இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள அனுமந்தபுத்தேரி நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கு தினமும் வருகை தந்து அப்பகுதி வாழ் மக்களுக்கு இலவச வைத்திய சிகிச்சை அளித்தனர்.

**13.தொழிற்காலைகள்**

இந்நகராட்சி எல்லையின் ஜீ.எஸ்.டி, சாலையில் ஜிப் செய்யும் தொழிற்சாலை ஒன்று மட்டுமேயுள்ளது. வேறு தொழிற்சாலை ஏதுமில்லை இந்த தொழிற்சாலைக்கு வழக்கம் போல் இவ்வாண்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு **249—**ன்

கீழ் உரிமையாணை வழங்கப்பட்டு பொது நல சட்டத்தின் கீழ் தொழிற்சாலையை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இத்தொழிற்சாலையை துப்புரவு ஆய்வர்கள் அவ்வப்போது சென்று ஆய்வு செய்து வந்தனர்.

**14.நாளங்காடியும் ஆடு அறுவை சாலையும்**

காய்கறிகள் மீன் மற்றும் மாமிச நாளங்காடிகளும் ஆடு அறுவை சாலையும் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இவ்வாண்டும் தொடர்ந்து இருந்து வருகிறது. வழக்கம் போல் இவ்வாண்டில் இவைகள் குத்தகைக்காக பொது ஏலத்தில் விடப்பட்டன. இந்நகரில் வாரச் சந்தை ஏதுமில்லை. உரிய சுகாதார முறைப்படி இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுவைசாலை ஒன்று பராமரித்து வரப்படுகிறது. மாடுகள் மற்றும் பன்றிகள் அறுப்பதற்கென அறுவைசாலை ஏதும் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை. பகுதி – 2 திட்டத்தின் கீழ் புதியதாக ஆடு அறுவை கூடம் ரூ..23.00 இலட்ச மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பராமரிட்பபிற்கு ஒப்படைக்க உள்ளது.

**15.சுடுகாடும் இடுகாடும்**

குண்டூர் பகுதியில் சுமார் ஏழ ஏக்கர் நிலப்பரப்பிவ் ஒன்றும் நத்தம் பகுதியில் பாலாற்றங்கரையோரமாக 2 ஏக்கர் 60 செண்ட் நிலப்பரப்பில் ஒன்றும் தட்டான்மலையில் ஒன்றும் உள்ளன. இவற்றை தவிர இந்நகர எல்லைக்குள் முகமதியர்களுக்கென தனியாக மத்தியில் ஒரு இடுகாடு தனியாக உள்ளது. இந்நகர எல்லைக்கு அப்பால் திம்மாவரம் கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கென இடுகாடு ஒன்று தனியாக உள்ளது. நகராட்சியில் புதியதாக பகுதி–2 திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகன மேடை ரூ.48.00 லட்சம் மதிப்பீட்டில் பழவேலி சுடுகாடு வளாகத்தில் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது..

**16.பொது சுகாதாரச் சட்டம்**

பொது சுகாதாரச் சட்டம் இந்நகரில் நல்ல முறையில்செயல்படுத்தப்படுகிறது

**17.அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான வியாபாரிகள்**

இந்த இனத்தின் கீழ் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் அனைவரும் இந்நகராட்சியிலிருந்து கடைகள் மற்றும் தொழில்கள் நடத்துவதற்குரிய உரிமையாணைகளைப் பெற்று வியாபாரத்திற்குரிய உரிமையாணையை பெறும்போதே உணவு கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் வியாபாரிகள் அனைவரும் உரிமையாணைகளை பெற்றனர். இவைகள் யாவும் பொது நல பிரிவிலுள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர்களாலும் துப்புரவு ஆய்வர்களாலும் நகர் நல அலுவலர் அவர்களாலும் அவ்வப்போது காண்காணிக்கப்பட்டு குறைகள் யாவும் உடனுக்குடன் களையப்பட்டன. அறிவிக்கப்பட்ட குறைபாடுகளை நீக்கிய பின்னர்தான் சம்மந்தப்பட்ட

நபர்களிடமிருந்து வரப்பெற்ற உரிமையாணை மனுக்கள் மீது உரிமையாணைகள் வழங்கப்பட்டது. இந்நகரிலுள்ள இயந்திர நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், சிற்றுண்டி விடுதிகள், சோடா பேக்டரி மற்றும் தேனீர் விடுதிகள் ஆகியவற்றையும் துப்புரவு ஆய்வர்களால் மற்றும் நகர் நல அலுவலராலும் நேரில் பார்வையிடப்பட்டன. துப்புரவு ஆய்வர்களால் 950 உணவு விடுதி மற்றும் தேனீர் கடைகள் முதலியன உரிமம் வழங்கப்பட்டதில் தொகை ரூ.1,43,810/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**18.தொற்று நோய் கொட்டகை**

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொற்று நோய் பிரிவு தனியாக அமைக்கப்பட்டுள்ளது. தொற்று நோய் பீடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இப்பிரிவில் உரிய சிகிச்சை தனியாக அளிக்கப்படுவதால் இந்நகராட்சியால் தொற்று நோய் கொட்டகை ஏதும் தனியாக அமைக்கபடவில்லை.

**பொது**

இந்த அறிக்கையாண்டில் நகராட்சி பணிகள் யாவும் தொடர்ந்து நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஒருங்கிணை ஒத்துழைப்பினை நல்கிய நகராட்சி பொறியாளர் மற்றும் எல்லா பிரிவு அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆணையர்,
செங்கல்பட்டு நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
செங்கல்பட்டு,
நாள் .06.2019

**செங்கல்பட்டு நகராட்சி**
**1920–ம் ஆண்டின் திருத்தப்பட் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் கீழ் 1993–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 30–ஆம் நாளிட்ட 97–எண் செங்கல்பட்டு நகர மன்ற தீர்மானத்தின் படி உத்தேசிக்கப்பட்ட திருத்தப்பட்ட உரிமையாணையை விகிதங்கள் அளவு 7,8,9 வசூலிக்கப்பட்டதற்கான அறிவிப்பு**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண். | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட பிரிவு எண்கள் | இன்ன காரியத்திற்காக அனுமதி கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்பது | விகிதம் | அளவு | காலம் | விகிதம் | அளவு | காலம் |
| 1 | 197 215(1) 231 | தார்சு கட்டிடம் கட்ட பகுதி தார்சு வாகவும் ஒரு முதலியன வாகவும் முழுவதும் தார்சாக இருத்தல் | 25.00 | ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் அதன் பாகத்திற்கும் | – | 40.00 | ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு கட்கு |
| 2 | 197 | ஓடு அல்லது ஜின் சிட்ட மாற்றியும் ஒலை அல்லாதது | 20.00 | ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் அதன் பாகத்திற்கும் | – | 30.00 | ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு கட்கு |
| 3. | 197 | ஒரு பொதுத் தெருவை ஒட்டி கட்டப்படும் சுறுச் சுவருக்கும் மற்றைய சுற்றுச் சுவருக்கு 8 அடிக்குலாளாக | 10.00 | 100 அடி நீளத்திற்கு | – | 15.00 | 100 அடி நீளத்திற்கு | மூன்று ஆண்டு கட்கு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| 4. | 197 | மல அறைகள் கட்ட | 5.00 | ஒவ்வொரு அறைக்கும் | – | 15.00 | ஒவ்வொரு அறைக்கும் | |
| 5. | 197 | செப்டிக் டாங்க் கட்ட | 10.00 | ஒன்றுக்கு | – | 25.00 | ஒன்றுக்கு | |
| 6. | 197 | குளியலறை | 5.00 | ஒவ்வொரு அறைக்கும் | – | 15.00 | ஒவ்வொரு அறைக்கும் | |
| 7. | 207 | கிணறு வெட்ட | 10.00 | ஒன்றுக்கு | – | 20.00 | ஒன்றுக்கு | |
| 8. | 208 | குடிசைகள் தற்காலிக ஓலை ஷெட்டுகள் முதலியன | – | இலவசம் | – | – | இலவசம் | |
| | 210 | அங்கீகரிக் கப்பட்ட வீட்டு வரைபடங்களுக்கு | | | | | | |
| | 213<br>197 | குடிசைகள் அல்லது மற்றைய கட்டிடங்கள் கட்ட கூடிய | – | இலவசம் | – | – | இலவசம் | |
| 9. | – | 10 செண்டுக்கு உட்பட்ட எந்த மனைக்கும் | 20.00 | மனை ஒன்றுக்கு | – | 25.00 | ஒரே ஒரு தடவை மனை ஒன்றுக்கு | |
| 10. | – | 10 செண்டுக்கு மேல் 20 செண்ட் வரை | 30.00 | மனை ஒன்றுக்கு | – | 40.00 | | |
| 11. | – | 20 செண்டுக்கு மேற்பட்ட மனைக்கு | 50.00 | மனை ஒன்றுக்கு | – | 60.00 | | |
| 12. | – | கட்டிடங்கள் நேரில் பார்வையிட ஒவ்வொரு மனைக்கும் | 10.00 | மனை ஒன்றுக்கு | – | 20.00 | | |

# இணைப்பு

## <u>சொத்து வரிகளின் பேரில் வரி விதிப்பு</u>

| கட்டிடங்கள் விவரம் | என்னி வரி என்பது | அவை வருட விகிதம் | வரி விதிப்பதற்கு அதிகாரம் 28.12.56 தேதிய மன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| கட்டிடங்கள் உள்ளது அவற்றை சேர்ந்தார்போலுள்ள நிலங்களில் மேலும் கட்டிடங்கள் | பொது காரியங்களுக்கு வருடாந்திர வாடகை | 3 | 28.12.56–தேதிய மன்ற தீர்மானம் |
| | மதிப்பில் | 6 | 31.12.70 தேதிய தீர்மானம் |
| | தண்ணீர் சாக்கடை வரி வருடாந்திர | 3 | 24.4.47–அரசு உத்திரவு எண்.600 |
| | வாடகை மதிப்பில் | 1 | 28.12.56 தேதிய தீர்மானம்.252 |
| | விளக்கு வரி வருடாந்திர வாடகை மதிப்பில் கக்கூஸ் வரி சொத்து வரியின் பேரில் கல்வி வரி | 2 1/2 | 20.12.56 தேதிய தீர்மானம் 252 |
| கட்டிடங்களை சேர்ந்தார் போல் அல்லாததும் விவசாய காரியங்களுக்கு உபயோகப்படாததுமான காலி மனை | பொது காரியங்களுக்கு சொத்து வரியின் பேரில் | 2 1/2 | 30.6.61 தேதிய மன்ற தீர்மானம்.67 |
| | தண்ணீர் சாக்கடை வரி மூலதன மதிப்பில் | 1 | 18.2.67–தேதிய அரசு உத்திரவு எண். |
| | விளக்கு வரி மூலதன் மதிப்பில்<br><br>குப்பை வாரும் வரி மூலதன மதிப்பில்<br><br>கல்வி வரி மூலதன மதிப்பில் | 1<br><br>1/16<br><br>4 | 29.7.47 தேதிய திர்மானம் 178. |
| விவசாய காரியங்களுக்கு | பொது காரியங்களுக்கு அல்லது சொத்து வரியின் பேரில் ரெவின்யூ கிஸ்தியின் பேரில் ரெவின்யூ | ஒரு ரூபாயில் அரசு<br><br>மொமோ 1156, .30.10.56 | 1156/30,20,56<br><br>20 |

| | | | |
|---|---|---|---|
| | கிஸ்தியின் | | |
| | விளக்கு வரி குப்பை வாரும் வரி | 20 31.3.56 | 13 31.3.56 தேதிய அரசு உத்திரவு எண் |
| | கல்வி விரி | 12 31.3.56 | உள்ளாட்சி துறை |
| சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 4(1)ன் கீழ் விவரித்துள்ள கட்டிடங்களின் பேரில் | பொது காரியங்களுக்கு வருடாந்திர வாடகை | 3/4 % | 29.1.43 தேதிய உத்திரவு 2557 |
| | மதிப்பின் | 1% | |
| | தண்ணீர் சாக்கடை வரி | 2% | 22.2.51 தேதிய தீர்மானம் 254 |
| | விளக்கு வரி | 2% | 26.11.44 தேதிய அரசு உத்திரவு எண். |
| | குப்பை வாரும் வரி | 3/3% | ஆரசினர் உத்திரவு 2587/6.12.73 |
| | கல்வி வரியில்லாதது சொத்து வரி | 25% | 9.4.69 தேதிய அரசினர் உத்திரவு எண். |

## இணைப்பு–2

## தொழில்வரி

| வ.எண். | ஆறுமாத வருமானம் | 1.10.2006 அரை வருட தொழில் வரி ரூ . | 1.10.2013 முதல் அரை வருட தொழில் வரி ரூ |
|---|---|---|---|
| 1 | ரூ.21,000/– வரை | வரி இல்லை | இல்லை |
| 2 | ரூ.21,001/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.101 | ரூ.136/– |
| 3. | ரூ.30,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.254/– | ரூ.343/– |
| 4. | ரூ.45,0001/– முதல் ரூ.60,000/– வரை | ரூ.506/– | ரூ.683/– |
| 5. | ரூ.60,001/– முதல் ரூ.75,000/–வரை | ரூ.706/– | ரூ.1026/– |
| 6. | 75,001 முதல் அதற்கு மேல் | ரூ.1013/– | ரூ.1250/– |

| | | | |
|---|---|---|---|
| | | | |

**தணிக்கை தடைகள் விவரம்**

**2017–2018**

| **1.4.2017ல் நிலுவையில் உள்ள தணிக்கை தடைகள்** | **2017–18 பெறப்பட்ட தணிக்கை தடைகள்** | மொத்தம் | **2017–18 நிவர்த்தி** செய்யப் பட்டவை | **31.3.18ல் நிலுவையில் உள்ள தணிக்கை தடைகள்** | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1339 | – | 1339 | 406 | 933 | மீதமுள்ள தணிக்கை தடைகளை நீக்குவதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

# செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக அறிக்கை 2017–2018